DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.6/2023**

**2025-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 12-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 12 | தொழில் | - | மருத்துவர் |
| பெயர் | - | திரு.குகன் | வட்டம் | - | திருப்பூர் மாவட்டம் |
| த/பெ | - | மதியழகன் | சமயம் | - | |
| கிராமம் | - | திருப்பூர் அரசு மருத்துவமனை | வயது | - | 46/2025 |
| சாதி | - | | | | |

**21-08-2025**

**( 1, 2 எதிரிகள் ஆஜரில்லை )**

(1, 2 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருப்பூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 03-12-2022-ம் தேதி பிற்பகல் 03.30 மணியளவில் கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்தபோது வால்பாறை காவல் நிலைய குற்ற எண் 192/2022, என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட சுமார் 31 வயதுடைய மணிகண்டன் என்கிற ஒரு ஆணின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டி வால்பாறை காவல் ஆய்வாளரின் விண்ணப்பத்தை காவலர் 1037 திரு.சுரேஷ்குமார்என்பவரிடம் இருந்து பெறப்பட்டது. மேற்படி பிரேதத்தை பிரேத வழிக்காவலர் அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை அன்று 03.35 மணியளவில் தொடங்கி 04.30 மணியளவில் முடித்தேன்.

பிரேதத்தில் உடல் முழுவதும் பிணவிரைப்பு தன்மை காணப்பட்டது. வலது மற்றும் இடது காதுகளில் காய்ந்த ரத்தக்கரைகள் காணப்2022 பட்டது. கீழ்க்கண்ட இறப்புக்கு முன் ஏற்பட்ட காயங்கள்,

1. கருமை நிறத்திலான சிராய்ப்பு காயங்கள் (a), வலது கால் முட்டியின் முன்புறத்தில் 2X1 செ.மீ, அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது. (b), இடது தொடையின் கீழ் பகுதியில் 7X5 செ.மீ அளவில் காணப்பட்டது. (c), இடது முழங்கையில் முன்புறத்தில் 2x1 செ.மீ, அளவில் காணப்பட்டது, (d). இடது கன்னத்தில் 10X7 செ.மீ, அளவில் காணப்பட்டது,(e). நெற்றியின் இடது புறத்தில் 9X5 செ.மீ, அளவில் காணப்பட்டது,(f) இடது தோள்பட்டையின் மேல்பகுதியில் 8X 5 செ.மீ, அளவில் காணப்பட்டது,

2. தலை பகுதியை கூராய்வு செய்ததில் கபாலதோளில் இடது புற முன் மற்றும் பக்கவாட்டு பகுதியில் சிவந்த நிறத்தில் 17X11X1-1.5 செ.மீ, அளவில் கன்றிய காயங்கள் இருந்தது. மண்டை ஓடு இயல்பாக இருந்தது. மூளைசவ்வுகள் நல்ல நிலையில் காணப்பட்டன. மூளையில் முழுவதிலும் அதன் அறைகளிலும் ரத்தக்கசிவு காணப்பட்டது. மூளைத்தண்டு இயல்பாக இருந்தது. மண்டைஓட்டின் அடிப்பகுதி இயல்பாக இருந்தது.

3. கழுத்துப்பகுதியில் உள்ள C1-C2 தண்டுவடம் எலும்புகளும் இடுப்பு பகுதியில் உள்ள L3-L5 தண்டுவட எலும்புகள் முழுமையாக உடைந்து காணப்பட்டது. அவற்றின் சுற்றிலும் ரத்தக் கசிவுகள்

காணப்பட்டது.

4. மார்பு பகுதியை கூராய்வு செய்ததில் மார்பக நடுப்பகுதியில் 14X11X 1 செ.மீ அளவு கன்றிய காயம், இடது காரை எலும்பு நடுப்பகுதி உடைந்த நிலையிலும் அதை சுற்றி ரத்தக்கசிவுகள் காணப்பட்டது. வலது மற்றும் இடது புற மார்பு அறைகளில் 355 மி.லி.அளவில் ரத்தம் கலந்த நீரும் ரத்தக்கட்டிகளும் இருந்தது. விலா எலும்புகள் இயல்பாக இருந்தன. இரண்டு நுரையீரல்களில் கீழ் மற்றும் நடுப்பகுதியில் கன்றிய காயம் காணப்பட்டது. அதை கூராய்வு செய்தில் ரத்தம் துவைந்து காணப்பட்டது.

5. வயிற்று பகுதி கூராய்வு செய்ததில் வயிற்று அரையில் 225 மிலி அளவில் ரத்தம் கலந்த நீரும் 105 கிராம் அளவு ரத்தக்கட்டிகளும் காணப்பட்டன. கல்லீரலில் கிழிந்த காயம் இருந்தது. அதை கூராய்வு செய்ததில் ரத்தம் துவைந்து காணப்பட்டது.

மற்ற அனைத்து உள் உறுப்புகளும் நல்ல நிலையில் இருந்தது. அவற்றை கூராய்வு செய்து பார்த்ததில் ரத்தம் துவைந்து காணப்பட்டது. மேலும் பிரேதத்தின் உள்உறுப்புகள் ரசாயான பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

கருத்துரை இறந்து நபர் அவரது தலை மற்றும் கழுத்து தண்டுவடத்தில் ஏற்பட்ட காயங்களின் விளைவினால் மரணம் அடைந்துள்ளார் என்று கருத்து தெரிவித்து பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன்.

இறுதி கருத்துரை கோவை வட்டாரத் தடய அறிவியில் ஆய்வகளத்தில் இருந்து பெறப்பட்ட ரசாயான பகுப்பாய்வு அறிக்கை எண் CBE/TOX.H4450/2022-ல் எந்தவித விஷமோ அல்லது மதுவோ கண்டறியவில்லை என்பதை வைத்து இறந்த நபர் பிரேதபரிசோதனையின் முதல் கருத்துரையில் கூறியவாறு மரணம் அடைந்துள்ளார் என்ற இறுதி கருத்துரை வழங்கினேன். **(நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

ஒரு நபர் மது அருந்தி இருந்தால் நான்காவது நாளில் அவருக்கு மது அருந்தியதற்கான அறிகுறிகள் காண இயலாது என்றால் சரிதான். ஒருநபருக்கு வலிப்புநோய் இருந்து அந்த நபர் இரண்டு மூன்று மணி நேரம் வெய்லில் இருந்து அதனால் அவருக்கு மயக்கம் வரும்போது அந்த நபருக்கு வலிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புஇல்லை. அந்த நபர் நீண்ட நேரம் தண்ணீரில் இருந்தால் வலிப்பு ஏற்பட வாய்புள்ளது என்றால் வாய்ப்பு இல்லை.

**<u>மறு விசாரணை</u> :**

நான் பிரேத பரிசோதனை செய்தநபருக்கு வலிப்பு நோய் இருந்ததற்கான அறிகுறி எனது பிரேத பரிசோதனையில் தெரியவந்ததா என்றால் இல்லை. மூளையில் ரத்தக்கசிவு மட்டும் காணப்பட்டது.

**<u>மறுகுறுக்குவிசாரணை</u>**

அந்த நபருக்கு வலிப்பு ஏற்பட்டு நான்கு நாட்களுக்கு பின்பு அதற்கான அறிகுறிகளை பிரேத பரிசோதனையில் காண இயலாது என்றால் சரிதான். இறந்த நபர் மயக்கநிலையில் இருந்ததால் கண்டறிய இயலவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.